# ஏழை எளியோருக்கு உதவிட புதிய திட்டம்

# "முதல்வர் மருந்தகங்கள்" - 1000: பொங்கல் அன்று தொடக்கம்!

## 78 - வது சுதந்திர தின விழா : சென்னை கோட்டை கொத்தளத்தில் தேசியக் கொடியை ஏற்றி வைத்து ஆற்றிய உரையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்ட அடுக்கடுக்கான அறிவிப்புகள் !

சென்னை, ஆக. 17-

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (15.8.2024) சென்னை, தலைமைச் செயலகக் கோட்டை கொத்தளத்தில் தேசியக் கொடியினை ஏற்றி வைத்து ஆற்றிய சுதந்திரத் திருநாள் விழாப் பேருரை யில், ஏழை, எளிய மக்களுக்கு உதவிட புதிய திட்டமாக "முதல்வர் மருந்தகங்கள்" - 1000 முதல் கட்டமாக தொடங்கப்படும் என அறிவித்தார்.**

இவ்விழாவில் முதல்வர் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-

**தாயின் மணிக்கொடி பாரீர்! அதைத்**
**தாழ்ந்து பணிந்து புகழ்ந்திட வாரீர்!**

என்ற தேசியக்கவி பாரதியின் பாடல் வரிகளைப் பாடும் தகுதியை நமக்குத் தந்த இந்திய நாட்டு விடுதலை வீரர்கள் அத்தனை பேரையும் வணங்கி என் உரையைத் தொடங்குகிறேன்.

நாட்டு மக்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த விடுதலை நாள் நல்வாழ்த்துகளை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன்.

### விடுதலைக்குப் பாடுபட்ட தியாகிகளைப் போற்றுவோம்!

விடுதலையைப் பாடுபட்டுப் பெற்றுக் கொடுத்த தியாகிகளைப் போற்றுவோம். அவர்களின் குடும்பத்தினருக்கு நன்றியைத் தெரிவிப்போம். எந்த நோக்கத்துக்காக அவர்கள் போராடினார்களோ, அந்த நோக்கம் நிறைவேற எந்நாளும் உழைப் போம் என்று இந்நாளில் உறுதி ஏற்போம்.

இந்த விடுதலை எளிதாகக் கிடைத்த விடுதலை அல்ல. முந்நூறு ஆண்டு காலப் போராட்டத்துக்குப் பின்பு கிடைத்த சுதந்திரம் இது. இரத்தத்தையே வியர்வையாகத் தந்து, தங்கள் உடலையே விடுதலை உலைக்களத்துக்கு உணவாகத் தந்த எண்ணற்ற தியாகிகள் நம் இந்திய மண்ணில் உண்டு. அதிலும், குறிப்பாக தமிழ்நாட்டில் அதிகம் உண்டு. இந்திய தேசிய இராணுவத்தை உருவாக்கி, வெளிநாடுகளின் உதவியையும் பெற்று நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் படை நடத்தியபோது, கரம் கோர்த்தவர்கள் தமிழ்நாட்டு வீரர்கள். விடுதலையை அடைய கால நிர்ணயம் இல்லை என்று தெரிந்தும், உயிரையே ஈந்த மாவீரர்கள் வாழ்ந்த மண், இந்தத் தமிழ் மண். அறவழியில், எதிரியைப் பணிய வைத்த அண்ணல் காந்தியடிகளின் பின்னால் முழு மனதோடு இந்தியா அணி வகுத்தது. அதிலும் தமிழ்நாடு முழுமையாகக் கை கோர்த்து நின்றது.

### சத்தியப் பாதையில் அணிவகுத்தவர்கள் தமிழ்நாட்டுத் தியாகிகள்!

"கத்தியின்றி இரத்தமின்றி யுத்தமொன்று வருகுது

சத்தியத்தின் நித்தியத்தை நம்பும் யாரும் சேருவீர்"

என்று நாமக்கல் கவிஞர் பாடிய பாடல் வரிகளுக்கு ஏற்ப சத்தியப் பாதையில் எத்தனை சோதனைகள் வந்தாலும், அணி வகுத்தவர்கள் தமிழ்நாட்டுத் தியாகிகள். இவர்களின் தியாகத்தால்தான், 1947 ஆகஸ்ட் 15ஆம் நாள் விடுதலைக் காற்றைச் சுவாசித்தோம். 'நமக்கான நாடு நமதே' என்பதை உணர்ந்தோம். நினைத்துப் பாருங்கள், 77 ஆண்டுகளைக் கடந்து விட்டது விடுதலை இந்தியா. தியாகிகளின் கனவான அனைவருக்குமான இந்தியாவை நாம் உருவாக்கி வளர்த்து வருகிறோம். வேற்றுமையில் ஒற்றுமை, ஒருமைப்பாடு, ஒருங்கிணைந்த வளர்ச்சி இவற்றின் ஒன்றுபட்ட வலிமையே நாட்டின் வல்லமையாக உலகுக்குக் காட்டி வருகிறோம். ஒரு வண்ணமல்ல நமது கொடி, அது மூவண்ணக் கொடி! நமது பன்முகத்தன்மையின் அடையாளம் இந்தக் கொடி!

விடுதலை நாள் என்பது, அரசியல் விடுதலை நாளாக மட்டுமல்லாமல், பண்பாட்டு விழாவாக ஒட்டுமொத்த இந்திய மக்களால் கொண்டாடப்படுகிறது. ஆகஸ்ட் 15 என்பது ஆனந்த சுதந்திரம் அடைந்த நாள் மட்டுமல்ல, ஆனந்தமான இந்தியாவை அடுத்தடுத்த ஆண்டுகளில் உருவாக்கத் திட்டமிடும் நாளாகவும் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம்.

இந்தத் திருநாளின் வெற்றிச் சின்னமாக விளங்கும் நம் தேசியக் கொடியை தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலக முகப்பில், ஓங்கி உயர்ந்து நிற்கும் கம்பத்தில் ஏற்றி வைத்துப் பட்டொளி வீசிப் பறக்க விட்டுள்ளோம். விடுதலை நாளில் மாநில முதலமைச்சர்கள் கொடியேற்றும் உரிமையை 50 ஆண்டுகளுக்கு முன்னால், முதன் முதலில் 1974ஆம் ஆண்டு பெற்றுத் தந்தவர், நம் நெஞ்சங்களில் என்றென்றும் நீக்கமற வீற்றிருக்கும் நூற்றாண்டு நாயகர் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள்!



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், சுதந்திரத் திருநாளையொட்டி நேற்று முன்தினம் (15.8.2024) சென்னை, தலைமைச் செயலகக் கோட்டை கொத்தளத்தில் தேசியக் கொடியினை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார்.

### தமிழ்நாட்டு மக்களுக்கு என்றென்றும் நன்றிக்குரியவன்!

**இதுவும் ஒரு விடுதலைப் போராட்டம்தான்! மாநிலங்களுக்கு அதிக உரிமைகள் வேண்டும் என்பதற்கான போராட்டம்! முத்தமிழறி ஞர் கலைஞர் அன்று பெற்றுத்தந்த உரிமையின்படி, அவரது நூற்றாண்டு நிறைவு விழா ஆண்டில், இன்று நானும், நான்காவது ஆண்டாக சென்னை கோட்டைக் கொத்தளத்தில் தேசியக் கொடியை ஏற்றும் வாய்ப்பைப் பெற்றமைக்காகப் பெருமை அடைகிறேன். இந்த அருமையான வாய்ப்பை தமிழ்நாட்டின் முதலமைச்சராகக் கொடியேற்றும் வாய்ப்பை எனக்குத் தந்த எனதருமைத் தமிழ்நாட்டு மக்களுக்கு என்றென்றும் நன்றிக்குரியவன் ஆவேன்.**

## கலைஞர் பெற்றுத் தந்த உரிமை!

**இந்தத் திருநாளின் வெற்றிச் சின்னமாக விளங்கும் நம் தேசியக் கொடியை தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலக முகப்பில், ஓங்கி உயர்ந்து நிற்கும் கம்பத்தில் ஏற்றி வைத்துப் பட்டொளி வீசிப் பறக்க விட்டுள்ளோம். விடுதலை நாளில் மாநில முதலமைச்சர்கள் கொடியேற்றும் உரிமையை 50 ஆண்டுகளுக்கு முன்னால், முதன்முதலில் 1974ஆம் ஆண்டு பெற்றுத் தந்தவர், நம் நெஞ்சங்களில் என்றென்றும் நீக்கமற வீற்றிருக்கும் நூற்றாண்டு நாயகர் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள்!**

நம் நாட்டில் விடுதலைக்காக 300 ஆண்டுகளாய் நிகழ்ந்த நெடிய போராட்டங்களில் இன்னுயிர்களை ஈந்தும், உடல் உறுப்புகளை இழந்தும், சொத்து சுகங்கள், மனைவி மக்கள் அனைத்தையும் பறிகொடுத்தும், நம் நாட்டின் விடுதலையை நமக்குப் பெற்றுத் தந்த வீரதீரத் தியாக வேங்கைகள் அனைவருக்கும் நம்முடைய நன்றிகளைத் தெரிவிக்கும் அடையாளமாக வீர வணக்கம் செலுத்திடுவோம்! இன்று மட்டுமல்ல; என்றைக்கும் அந்த வீரத் தியாகிகளை நினைவுகூரும் வகையில் அவர்கள் வாழ்ந்த பகுதிகளில் அவர்களுக்கெல்லாம் சிலைகள், மணிமண்டபங்கள் என நினைவுச் சின்னங்கள் அமைத்துப் போற்றி வருகிறோம்.

2021இல் எனது தலைமையில் அமைந்திருக்கிற உங்கள் திராவிட மாடல் ஆட்சியில்;

- கப்பலோட்டிய தமிழன் வ.உ. சிதம்பரனாருக்குக் கோயம்புத்தூரில் திருவுருவச்சிலை:
- விடுதலைப் போராட்ட வீராங்கனை அஞ்சலை அம்மாளுக்குக் கடலூரில் திருவுருவச் சிலை;
- நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை அவர்களுக்கு நாமக்கல் நகரில் சிலை;
- திவான் பகதூர் திராவிடமணி இரட்டைமலை சீனிவாசன் அவர்களுக்கு மணிமண்டபம்;
- குடியாத்தத்தில் விடுதலைப் போராட்ட தியாகி அண்ணல் தங்கோ அவர்களுக்குத் திருவுருவச் சிலை
- தூத்துக்குடி மாவட்டம், கவர்னகிரியில் வீரன் சுந்தரலிங்கம் அவர்கள் மணிமண்டபத்தில் புதிய சிலைகள்

ஆகியவற்றை அமைத்துத் திறந்து வைத்துள்ளேன்.

- பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் திருமகனாரின் நினைவிடத்தில் இரண்டு மண்டபங்கள் அமைக்கும் பணிகள்;
- பரமக்குடியில் தியாகி இம்மானுவேல் சேகரனார் அவர்களுக்குத் திருவுருவச் சிலை மற்றும் அரங்கம் அமைக்கும் பணிகள்;
- வீராங்கனை குயிலி அவர்களுக்குச் சிவகங்கையில் திருவுருவச் சிலை நிறுவும் பணிகள்;
- விடுதலைப் போராட்ட வீரர் "வாளுக்குவேலி அம்பலம்" அவர்களுக்குச் சிவகங்கை மாவட்டத்தில் திருவுருவச் சிலை நிறுவும் பணிகள்;
- தியாகி கொடிகாத்த திருப்பூர் குமரன் அவர்களுக்கு ஈரோடு மாவட்டத்தில் திருவுருவச் சிலையுடன் கூடிய அரங்கம் அமைத்திடும் பணிகள்

ஆகியவை நடைபெற்று வருகின்றன. இப்படி, எந்த மாநிலமும் செய்யாத முறையில் அனைத்துத் தியாகிகளையும் போற்றி வருகிறது தமிழ்நாடு. அந்தத் தியாகிகளின் கனவையும் நிறைவேற்றி வருகிறது நமது திராவிட மாடல் அரசு.

"திராவிட மாடல் என்றால் என்ன?" என்று கேட்பவர்களுக்கு நான் பல முறை விளக்கமளித்திருந்தாலும், அதனை மீண்டும் ஒரு முறை இங்கே குறிப்பிட்டுச் சொல்வது பொருத்தமாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

சமூகநீதி, சமத்துவம், சுயமரியாதை, மொழிப் பற்று, இன உரிமை, மாநில சுயாட்சி ஆகிய கருத்தியல்களின் அடித்தளத்தில் நிற்கும் இயக்கம்தான் திராவிட முன்னேற்றக் கழகம். தொழில் வளர்ச்சி, சமூக மாற்றம், கல்வி மேம்பாடு ஆகிய அனைத்தும் ஒரே நேரத்தில் நடக்க வேண்டும். வளர்ச்சி என்பது பொருளாதார வளர்ச்சியாக மட்டுமல்ல, சமூக வளர்ச்சியாக இருக்க வேண்டும். பொருளாதாரம் - கல்வி - சமூகம் - சிந்தனை - செயல்பாடு ஆகிய ஐந்தும் ஒருசேர வளர வேண்டும். அதுதான் தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும், முத்தமிழறிஞர் கலைஞரும் காண விரும்பிய வளர்ச்சி. அதுதான் திராவிட மாடல் வளர்ச்சி!

### பல்வேறு துறைகளிலும் தமிழ்நாடு அடைந்துவரும் வளர்ச்சி!

கடந்த மூன்றாண்டு காலத்தில் தமிழ்நாடு அடைந்த வளர்ச்சியை நீங்கள் பார்த்தால், அது ஒரே ஒரு துறை வளர்ச்சியாக இல்லாமல் பல்துறை வளர்ச்சியாக அமைந்திருக்கும்.

அதிலும், மகளிர் முன்னேற்றத்துக்கான திட்டங்களைச் சொல்ல வேண்டுமென்றால்,

* பெண்களின் சமூகப் பங்களிப்பையும், பொருளாதார விடுதலையையும் தமிழ்நாட்டில் அதிகரித்திருக்கும் திட்டம்தான் பெண்கள் அனைவருக்கும் கட்டணமில்லாப் பேருந்து வசதி அளிக்கும் 'விடியல் பயணம்' திட்டம்.

* அரசுப் பள்ளிகளில் பயின்று கல்லூரிக்குச் செல்லும் மாணவிகளுக்கு மாதம் 1,000 ரூபாய் வழங்கி பெண்கல்வியைப் போற்றும் திட்டம்தான் 'புதுமைப்பெண்' திட்டம்.

* சமூகத்திற்காகவும், குடும்பத்திற்காகவும் வாழ்நாள் முழுவதும் ஓயாமல் உழைத்துக் கொண்டிருக்கும் பெண்களுக்கு ஆண்டிற்கு 12 ஆயிரம் ரூபாய் உரிமைத்தொகை வழங்கி அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் திட்டம், கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்.

### 20 இலட்சத்து 73 ஆயிரம் மாணவர்களுக்கு காலை உணவு!

அடுத்து, கல்வி வளர்ச்சிக்கான திட்டங்களை எடுத்துக் கொண்டால், நமது திராவிட மாடல் அரசு இந்தியாவிலேயே முன்னோடித் திட்டமாக உருவாக்கிய, வரலாற்றுச் சிறப்புமிக்க 'முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்'. இந்தத் திட்டத்தால் 20 இலட்சத்து 73 ஆயிரம் மாணவர்கள் தினமும் சூடான - சுவையான உணவை உண்டு வருகிறார்கள். அதுமட்டுமல்ல, மாணவர்களின் வருகை அதிகரித்து, அவர்கள் தடையின்றிக் கல்வி பெறுதலும் உறுதிசெய்யப்பட்டுள்ளது.

தொடர்ச்சி 4 ஆம் பக்கம்

# கலைஞரின் எதிரொலி முரசொலி மாறன்!



இன்று (ஆகஸ்ட் 17), அண்ணன் முரசொலி மாறன் அவர்களின் பிறந்த நாள். அவர் இன்று உயிருடன் நம்மிடையே இருந்திருந்தால் அவருக்கு 91-வது பிறந்த நாள் - அதைத் திராவிட இயக்கம் சீரும் சிறப்புடன் கொண்டாடியிருக்கும். என்ன செய்வது ? இயற்கை, அவரது இணையிலாத் திறமைகளைக் கண்டு, அவற்றைத் தன்வயப் படுத்தித் தன்னை மேலும் தகுதிப் படுத்திக் கொள்ள, அவரை வாரி சுருட்டிக் கொண்டு போய்விட்டது போலும்!

பொதுவுடைமைத் தத்துவப் பிதாமகன் காரல் மார்க்ஸுக்கு ஓர் ஏங்கல்ஸைப் போல, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு முரசொலி மாறன். மனசாட்சியாக மட்டுமல்லாமல்,கலைஞரின் உயிருக்கு நேரான திராவிட இயக்கத்தின் அடிப்படைச் சித்தாந்தங்களுக்கு மடை திறந்து வற்றாத வெள்ளம் பாய்ச்சியவர் மாறன்.

**திருக்குறளுக்கு உரை எழுதிய பரிமேலழகர் போல், தொல்காப்பியம் முழுமைக்கும் உரை எழுதிய இளம்பூரணர் போல், "திராவிட நாடு - மாநில சுயாட்சி" ஆகிய இருபெரும் அடிப்படை இலட்சியங்களுக்கு, விஞ்ஞான ரீதியிலான விளக்க உரை எழுதி, அவற்றின் நியாயத்தையும், நேர்மையையும் நிலைநாட்டியிருப்பவர் அண்ணன் மாறன் அவர்கள். அந்த சித்தாந்தங்களுக்குக் கலைக் களஞ்சியமே ( Encyclopedia ) மாறன் அவர்களின் நூல்கள்தான்.பேரறிஞர் அண்ணா அவர்கள் கோடிட்டுக் காட்டியதை அடிப்படைக் குறிப்பாக வைத்து, காலமெல்லாம் நிற்கும் கருத்தோவியம் தீட்டியவர் அண்ணன் மாறன்!**

பேரறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டதைப் போல, "நாம் நீண்ட பெருநாட்கள் எழிலுடன் விளங்கி, உலகுடன் உன்னதமான தொடர்பு கொண்டிருந்து - இடைக் காலத்தில் இடரும் இழிவும் தாக்கப் பெற்று, மங்கி, உருவும் திருவும் குலைந்து கிடக்கும் தாயகத்தை - பிறரிடம் சிக்கி, பித்துமனம் கொண்டு, வேற்றிடத்தைத் தமதெனக் கருதிக் கொண்டு, கருத்து கெட்டுக் கிடக்கும் மக்களிடம், இதோ நமது தாயகம் - நம்நாடு - மூதாதையர் கட்டிக் காத்த பேரரசு - என்று இயம்பி", படித்தோரும், பக்கம் நின்று கேட்டோரும் எழுச்சி கொண்டிடும் வகையில் காரண, காரிய, விளக்க உரை எழுதிக் காட்டியவர் முரசொலி மாறன்.அதன் காரணமாகவே அண்ணா அவர்கள், "மாறன் என்றால் சாமான்யமா - என் தம்பியல்லவோ! அதனால்தான் கனிவும் தெளிவும், சுவையும் பயனும் குலுங்கிட எழுதியிருக்கிறார்" என்று வியந்து பாராட்டிப் போற்றியிருக்கிறார்.

அண்ணா அவர்களால் வார்த்து வளர்த்தெடுக்கப் பட்ட தம்பிமார்கள் ஒவ்வொருவரும் ஒரு தனிச் சாதனைச் சரித்திரத்திற்குச் சொந்தக்காரர்கள் என்பதைத் திராவிட இயக்க வரலாறு தெளிவாகப் பதிவு செய்துள்ளது.

**"உருக்குலையா மங்கை ஒளி முகத்தை முத்தமிடக் கருக்கலிலே கண் விழிக்கும் திருக்குவளை"யில் பிறந்து, தாய்மாமன் கலைஞரின் கண்ணொளிக் கதகதப்பிலே வளர்ந்து, கலைஞரிடம் இருந்த நூல்களையெல்லாம் இளமையிலேயே கசடறக் கற்று, மாமனைப் போலவே மருமகன் பல்துறைப் பேராற்றலாளர் என்று பெயரெடுத்து, மாமனுக்கும், மாமனின் இதயமாம் இயக்கத்திற்கும் பெருமை சேர்த்திட அயராது உழைத்து, "கல்வி கரையில, கற்பவர் நாள்சில" என்பதுணர்ந்து, அரசியல் - பொருளாதாரம் - திராவிடப் படிநிலைப் பரிணாமம் தொடர்பான அனைத்தையும் தேடித் தேடிப் படித்து, படித்துப் படித்துப் பக்குவமாகச் சிந்தித்து சிந்தித்து, தமிழிலும், ஆங்கிலத்திலும் எழுதியும், பேசியும் வாழ்நாள்களைச் செவ்வனே செலவிட்டவர் முரசொலி மாறன்.**

முரசொலி மாறன் எழுதுகிறார் என்றால் அதில் அழகுடன் ஆழம் இருக்கும்; அவர் பேசுகிறார் என்றால் மாற்றாரும் கூர்ந்து கவனிக்கும் கருத்துச் செறிவிருக்கும் என்ற ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றாண்மைக்கு எடுத்துக் காட்டாக இயங்கியவர் அண்ணன் மாறன் அவர்கள்.

கலைஞரால் வளர்க்கப் பட்டவர் என்பதனாலே முரசொலி மாறன் அவர்கள், அரசியல் கட்டுரைகளையும், சிறு கதைகளையும் எழுதி வெளியிட்டார். தமிழ்த் திரை உலகில் பல படங்களுக்குக் கதை - வசனம் எழுதியதுடன், சில படங்களை இயக்கவும், தயாரிக்கவும் செய்தார்.பத்திரிக்கையாளராகப் பாங்குடன் பணியாற்றினார்.

அண்ணன் முரசொலி மாறன் அவர்கள் 36 ஆண்டுகள் நாடாளுமன்ற உறுப்பினராக நாடு போற்றப் பணியாற்றி, டெல்லியில் திராவிட இயக்கத்தின் திருமுகமாக விளங்கியவர்; மூன்று முறை ஒன்றிய அமைச்சராக இருந்து அமைச்சர் பொறுப்புக்குப் பொருத்தமான பொருள் ஊட்டியவர்; வளரும் நாடுகளின் எதிர்பார்ப்புகளைப் பிரதிபலித்திடும் வகையில், 'தோஹா 'மாநாட்டில் வாதுரை வழங்கி, வளர்ந்த நாடுகளை வாய் பிளக்கச் செய்தவர்.

**இங்கிலாந்துப் பிரதமர் டோனி பிளேரைச் சந்திக்க லண்டன் மாநகருக்குப் புறப்படும் முன், பிரதமர் ஐ.கே.குஜ்ரால் அவர்களிடம் அமைச்சராக ஆலோசனை பெறச் சென்றபோது, "நீ சொல்வதுதான் Policy" என்று பிரதமரே முழுச் சுதந்திரம் வழங்கிட முன் வந்தார் என்றால், அண்ணன் மாறன் அவர்களின் மதியூகத்தில், டெல்லிப் பேரரசு கொண்டிருந்த நன்னம்பிக்கையை நாட்டிற்குணர்த்தும்.**

மிகச்சிறு பிராயத்திலே கலைஞருடன் இணைந்து "துருவன்" நாடகத்திலே மழலை மொழியில் வசனம் பேசிய முரசொலி மாறன் அவர்கள்தான்; பின்னாளில், திராவிட இயக்க "டெமாஸ்தனிஸ் "எனப் பேருருவம் பெற்று, நல்லவர்களும் வல்லவர்களும் போற்றிய நாயகராக வலம் வந்தார்.

**கழகத்தின் இளைஞர்களுக்கு அறிவாற்றல் பெட்டகமாக விளங்கிய அண்ணன் மாறன் அவர்கள், என்றைக்கும் அவர்களுக்கு முன்னேற்றம் தரும் முன்னுதாரணர் என்பதில் எள்ளளவும் அய்யமில்லை! இன்று அவர் ஈங்கிருந்து, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நடத்தும் 'திராவிட மாடல்' ஆட்சியின் சீரையும், சிறப்பையும் கண்டிருந்தால், பூரிப்பில் பூத்திருப்பார்!**

**வாழ்க முரசொலி மாறன்!**

• • •

**கி.இராஜமாணிக்கம்**

• • •